

தி.மு.க. மகளிர் அணி சார்பில் சென்னை பெசன்ட் நகரில் மார்பக புற்றுநோய் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு முகாம் மருத்துவர் மாலதி நாராயண சாமி, டாக்டர் யாழினி ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது. இம்முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார். கழக மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன் தலைமை வகித்தார். இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அசன் மௌலானா எம்.எல்.ஏ., குமரி விஜய குமார், துரை கபிலன், பரிமேலழகர் மற்றும் மருத்துவர் நாராயணசாமி உள்ளிட்ட காவேரி மருத்துவமனை மருத்துவக் குழுவினர் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளுக்கும் துப்புரவு பணியாளருக்கு தேவையான தற்காப்பு உபகரணங்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 2024–25 ஆம் ஆண்டிற்கான உபகரணங்களை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஜி.ஹேமலதா ஞானசேகரன், உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் எம்.சி., ஒன்றிய குழு துணை தலைவர்.கே.வசந்தி குமார், பேரூர் கழக செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், உத்திரமேரூர் பேரூராட்சி மன்ற தலைவர் பொ.சசிகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### அரசின் திட்டங்களை பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்!

# அரங்கங்கள், சிலைகளை நன்கு பராமரித்து அவற்றின் நிலையை தலைமையிடத்திற்கு தெரிவிக்க வேண்டும்!

## செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவுரை!

*சென்னை, அக்.27-*

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோர்களுக்கான பணி ஆய்வுக் கூட்டம் 24.10.2024 மற்றும் 25.10.2024 ஆகிய நாட்களில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

இந்த பணி ஆய்வுக்கூட்டத்தில் 24.10.2024 அன்று மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் அம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களும், 25.10.2024 அன்று சென்னை, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் அம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அனைத்து மண்டலங்களுக்கும் உட்பட்ட மாவட்டங்களில், செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றில் நிலுவையில் உள்ளவற்றின் முன்னேற்ற நிலை, தமிழரசு மாத இதழ் சந்தாக்களை அதிகரித்தல், கள விளம்பரப் பணிகள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் தரவரிசை மற்றும் இதர பொருண்மைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் செய்தி மக்கள் தொடர்பு துறையின் வெளியீடான தமிழரசு மாத இதழ் 2023-2024ஆம் ஆண்டிற்கான சந்தா இலக்கினை எய்துவதற்கான முயற்சியின் முதலிடம் பெற்ற சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சா.சுவாமிநாதன், இரண்டாவது இடம் பெற்ற விழுப்புரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பெ.சதீஷ் மற்றும் மூன்றாம் இடம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ.செந்தில் அண்ணா ஆகியோர்களைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

### பணிகளை விரைந்து முடிப்பீர்!

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில், விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ் மொழிக்காகத் தியாகம் செய்த தலைவர்கள், மக்களால் போற்றப்பட்ட தலைவர்கள் ஆகியோர்களின் சிலைகளை நிறுவுவதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சிலைகளை நிறுவுவதற்கான இடத்தைத் தேர்வு செய்வது மட்டுமல்ல, திருவுருவச் சிலைகளைத் தயாரிப்பதற்கான புகைப்படங்களை அந்தந்தத் தலைவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களிடம் ஒப்புதல் பெற்று மாவட்ட ஆட்சியர் மூலமாக முன்மொழிவுகளைப் பெற்று பொதுப்பணித் துறையிடம் விரைவில் ஒப்படைக்க வேண்டும்.

இந்த ஆண்டு வரை அறிவித்த சிலைகளை உருவாக்குவதற்கான பணிகளிலும், அரங்கங்கள் கட்டப்பட்டுவரும் பணிகளையும் தொய்வில்லாமல் விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். திட்டப்பணிகளை ஆரம்பிக்கும்பொழுது அதன் வடிவமைப்பைச் சரிசெய்து நமது நோக்கங்களின் அடிப்படையில் அமைக்க முயற்சி எடுக்க ஈடுபாடு காட்ட வேண்டும். அரங்கங்கள், சிலைகளை நன்கு பராமரிக்க வேண்டும், அவற்றின் நிலை குறித்து அவ்வப்போது தலைமையிடத்திற்கு தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதேபோல் கள விளம்பரத்தைப் பொறுத்தவரை வெற்றிக்கதைகள் என்பதை இனிமேல், "நிறைந்தது மனம்" என்றே சொல்லவேண்டும். முதலமைச்சர் அவர்களின் உத்தரவோடு இந்தப் பெயர் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் வைக்கப்பட்டது. பொது மக்கள் அரசின் திட்டங்களின் மூலம் பயன்பெற்று நிறைவடைந்ததன் வெளிப்பாடுதான் அதன் அர்த்தம்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்கிற பயணத்தை மேற்கொண்டு திரும்பும்போதும், மனுநீதி நாள் முடித்து வரும் போதும் நிறைந்த மனம் நிகழ்ச்சி நடத்துவதற்கான வாய்ப்பாக மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தந்த வட்டாரத்தில் எந்தெந்த திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன, தற்போது அந்தத் திட்டங்களின் முன்னேற்றம், அவற்றின் மூலம் பயனடைந்தவர்களின் விவரம் போன்றவற்றை வெளியில் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் திட்டங்களைப் பற்றி அறிந்து நம்பிக்கை கொள்வார்கள். அரசு இத்திட்டங்களைச் செயல்படுத்துகிறது என்பதைப் பற்றியும் தெரிந்து கொள்வார்கள்.

### மாவட்டம் தோறும் மினி விளையாட்டரங்கம்!

துணை முதலமைச்சர் அவர்கள் தான் பொறுப்பேற்ற விளையாட்டுத் துறையின் மூலம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி மாவட்டம்தோறும் "மினி விளையாட்டு அரங்கம்" அமைத்து இளம் விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் செய்து வெற்றிபெறச் செய்துள்ளார்கள். அவ்வாறு வெற்றிபெற்ற வீரர்களையும் செய்தியாளர்களுடன் சென்று நேர்காணல் கண்டு பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இதனால் விளையாட்டில் ஆர்வம் உள்ள மற்றவர்களும் அறிந்து பயன்பெற வாய்ப்பாக அமையும்.

இதேபோல் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்", "புதுமைப் பெண் திட்டம்", "நான் முதல்வன் திட்டம்" "ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்", "முதலமைச்சரின் காலை உணவு திட்டம்", "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்", "கலைஞர் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்" போன்ற பல்வேறு அரசு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அந்தந்த மாவட்டங்களில் பத்திரிகை மற்றும் ஊடகங்களில் இத்திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல் வெளிவரும்போது மக்களுக்கு அரசின் மீது இன்னும் கூடுதலாக நம்பிக்கை ஏற்படும். மக்களும் இத்திட்டங்கள் எல்லாம் அரசால் செயல்படுத்தப்படுகின்றன என்பதைத் தெரிந்து, அவர்களும் அத்திட்டங்களின் மூலம் பயன்பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைவதற்கு அடித்தளமாக இருக்கும் என அறிவுறுத்தினார்.

### தமிழரசு இதழ் சந்தாவை அதிகரிக்க நடவடிக்கை!

தமிழரசு சந்தாவைப் பொறுத்தவரை ஆயுள் சந்தாவிற்கு முன்னுரிமை அளித்துச் சேகரிக்க வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள், போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், திரையரங்க உரிமையாளர்கள், வணிக நிறுவனங்கள், அரசுப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர்களை அணுகி தமிழரசு சந்தா சேகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு அடிக்கடி எடுத்துச் சென்று தமிழரசு இதழ் சந்தாவை முழு ஈடுபாட்டுடன் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் "தமிழரசு" இதழ் சந்தாதாரர்கள் ஒரு இலட்சத்திற்கு மேலாக உள்ளார்கள் என்ற செய்தியைச் சொன்னபோது அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தமிழரசு இதழ் சந்தா சேகரிப்பதை நீங்கள் உங்களுக்காகச் செய்யவில்லை. தமிழரசு இதழ் வளர்ச்சிக்காகச் செய்கிறீர்கள். பிற தனியார் பத்திரிகைகள் போல் அல்லாமல் தமிழரசு இதழ் மூலம் அரசின் உண்மையான செய்திகள் மக்களுக்கு போய்ச் சேர்கிறது. இந்த இதழில் பல்வேறு அரசின் செய்திகளை வெளியிடுகிறோம். போட்டித் தேர்வு எழுதுபவர்களுக்குப் பயன்படும் வகையிலும் செய்திகள் உள்ளன. கிராமப்புறங்களில் உள்ள அனைத்து நூலகங்களிலும் தமிழரசு மாத இதழை இடம்பெறச் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு, கடைக்கோடியில் உள்ள மக்களுக்கும் தமிழரசு இதழைக் கொண்டு சேர்க்க வேண்டும். இதன் மூலம் அதிக இதழ்கள் அச்சடித்து கடைக்கோடியில் உள்ள மக்களுக்கும் போய் சேர்கின்ற வகையில் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் தமிழரசு சந்தாக்களைச் சேகரிக்க மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### செய்யும் பணியில் காலதாமதம் கூடாது!

வாகன வசதி போன்ற தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பணிகளைச் செய்வதற்கு உதவிகள் தேவையென்றால் மண்டல இணை இயக்குநர்களிடம் தெரிவித்து பணிகளைச் செய்யவேண்டும். ஆனால் செய்யும் பணியில் எந்தவித கால தாமதமும் இருக்கக் கூடாது. முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கு இடையில் முயற்சி எடுத்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறார்கள் அந்தத் திட்டங்களின் பயன்கள் மக்களுக்குப் போய் சேரும் வகையில் விளம்பரப்படுத்தி, அவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நெருங்கிய தொடர்பில் இருக்கிறோம் என்பதை மனதில் நிறுத்தி, அவரைப் பயன்படுத்தித் துறையின் நோக்கத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற முத்து வாவாசி அவர்கள், பத்திரிகை செய்தி தயாரிப்பது குறித்தும், பத்திரிகை மற்றும் ஊடகங்களில் அனுப்பிய செய்திகளை வெளிவரச் செய்வது தொடர்பாகவும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள். தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி ஆலோசகர் ச.இராஜேந்திரன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலருக்கு ஆலோசனைகள் வழங்கினார். மேலும் மாவட்ட செய்தி மக்கள் தொ=டர்பு அலுவலர்களுக்கு ஊடக மையம் (*Media Hub*) மற்றும் தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் (*Tamil Nadu Fact Check Unit*) ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கப்பட்டது.

முன்னதாக, இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், முன்னிலையுரையாற்றினார். இக்கூட்டத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், வரவேற்புரையாற்றினார். இக்கூட்டத்தில் ச.செல்வராஜ், கூடுதல் இயக்குநர் (செய்தி), மு.பா.அன்புச்சோழன், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு), இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

